ஆய்வுகள் கூறுகின்றன. செக்ஸ் ஓர் ஈர்ப்பு ஆற்றலாக இருந்து உயிரினங்களை இனப் பெருக்கத்தில் ஈடுபடுத்தி இவ்வுலகத்தில் உயிரினங்கள் நிலைத்திருக்க உதவுகிறது. பெரும்பாலான உயிரினங்கள் இனப்பெருக்க காலம்வரை மட்டுமே உயிருடன் வாழ்கின் றன. சில விலங்குகளும், மனிதனும் மட்டும் இனப்பெருக்கக் காலம் முடிந்த பிறகும் நீண்ட நாள்கள் வாழ்கின்றன.

இதில் மனிதன் மட்டுமே பாலுறவு இன்பத்தை வாழ்நாள் முழுவதும் அனுபவிக் கிறான். மனிதனின் அளவற்ற கற்பனை வளத்தின் மூலம் பல்வேறு முறைகளில், பல் வேறு நிலைகளில், எந்த நேரத்திலும், எந்த நாளிலும் பாலுறவில் ஈடுபடுகின்றன.

மனிதன், விலங்குகளைவிட அதிகமான கற்பனை வளத்துடன் செக்ஸில் ஈடுபடு கிறான். வயது 57 ஆனாலும் 87 ஆனாலும் பாலுறவில் ஈடுபடலாம். அது உடல் நலத்தைப் பொறுத்தது. எத்தனை முறை வேண்டுமானாலும் பாலுறவு வைத்துக் கொள்ளலாம். உங்கள் மனைவியின் விருப்பம், ஒத்துழைப்பு, உங்கள் ஈடுபாடு ஆகியவற்றைப் பொறுத்தது. உடலுறவில் ஈடுபடுவதால் நன்மைதானே தவிர, தீங்கு எதுவுமில்லை.

**ஓர் ஆணோ அல்லது பெண்ணோ டைபாய்டு, மஞ்சள் காமாலை, மலேரியா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு முற்றிலுமாகக் குணமடைந்த பிறகு எத்தனை நாள்கள் கழித்து பாலுறவு கொள்வது நல்லது?**

டாக்டர் காமராஜ் சொல்லும் ஆலோசனை:

டைபாய்டு, மலேரியா போனற் நோய்கள் உடலுறவால் பரவுவதில்லை. ஆசனவாய்ப் புணர்ச்சியில் ஈடுபட்டால் டைபாய்டு மற்றும் மஞ்சள் காமாலையில் ஏ, சி போன்ற வகைகள் பரவ வாய்ப்புள்ளது. இவர்கள் பாலுறவுக்கு முன்பும், பின்பும் சோப்பு வைத்து உறுப்புகளை முழுமையாகக் கழுவ வேண்டும். உடலுறவின் மூலம் மஞ்சள் காமாலை பி வைரஸ் பரவும். எனவே, அவர்களுடைய துணைவிக்கு ஹெபடைட்டிஸ்-பி நோய் தடுப்பூசி கொடுக்க வேண்டும். ●

**என் மகன் பிரபல நடிகரின் வெறித்தனமான ரசிகனாக இருக்கிறான். அவனை எப்படி திருத்துவது?**

டாக்டர் கவுதம் தாஸ் சொல்லும் ஆலோசனை:

ஒரு பெற்றோராக உங்கள் மகனுக்கோ, மகளுக்கோ அவர்கள் விரும்பும் பிரபலங் களை வைத்து நல்ல உதாரணத்தை அறிமுகப்படுத்தலாம். ஒரு நடிகர் அல்லது நடிகையின் படங்களைப் பார்க்கட்டும். தவறில்லை. அந்த நடிகையோ, நடிகரோ திரைக்கு வெளியே மோசமான நடத்தையும், குணாதிசயங்களும் கொண்டவராக இருந்தாலும் அவர் நடிக்கும் பாத்திரத்தின் நல்ல குனாதிசயங்களை சுட்டிக்காட்டுங்கள். பின்னர் அந்த பிரபலத்தின் தவறான வெளியுலக வாழ்கையின் விளைவுகளைப் பற்றி விவாதியுங்கள்.

அவருக்கு ஏற்படுகிற உடல் உபாதை யாகட்டும், போலீஸ் வழக்கு, நிதிப் பிரச்னை யாகட்டும், எல்லாவற்றிலிருந்தும் தமது பணம் மற்றும் செல்வாக்கைப் பயன்படுத்தி, பிரபலங்களால் சுலபமாக மீண்டு வெளியே வந்து விட முடியும் என்பதை அழுத்திச் சொல்லுங்கள்.

நான்கு பேருக்கு நல்லது செய்கிற.... தனது செல்வாக்கை நல்ல விஷயங்களுக்குப் பயன்படுத்துகிற, (உதாரணத்துக்கு ஒரு குறிப்பிட்ட நோய்க்கு எதிரான விழிப் புணர்வு பிரச்சாரத்தில் ஈடுபடுபவர்) நபர் களின் படங்களையும், விளையாட்டு நிகழ்ச்சிகளையும் பார்க்க ஊக்கப் படுத்துங்கள்.

பெற்றோராகிய நீங்கள், அடிக்கடி உங்கள் பிள்ளைகளிடம் இதைப் பற்றிப் பேசுவதும், அவர்களது நடவடிக்கைகளைக் கண் காணிப்பதும் வேண்டும். ஏற்கனவே உங்கள் பிள்ளை, ஒரு தவறான பிரபலத்தின் தாக்கத்திற்கு ஆட்பட்டிருப்பது தெரிய வந்தால், அவன(ள)து நண்பர்கள், ஆசிரியர் கள், பள்ளி ஆலோசகர் உதவியுடன், அதிலிருந்து மீளவும், முற்றுப்புள்ளி வைக்கவும் செய்ய உதவி கேளுங்கள். அதுவும் பலன் தரவில்லையா? மனநல ஆலோசகரின் உதவியை நாடுங்கள். ●

# ஆலோசனை பக்கம்



டாக்டர் கவுதம் தாஸ், சென்னை-31

# 57 வயதில் ஆசை வரலாமா?